2015 மார்ச் 31]
102—

மீன் வளக் கல்லூரி

***14677—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன் வளக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை உள்ளத்திலே உறுதியாக ஏற்று, தமிழக மக்களின் வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, நாளும் உழைத்துக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன் வளக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்வியில் செழிப்பு மிகுந்த மாவட்டம். தென்னிந்தியாவிலே, நம்முடைய தமிழகத்திலே கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய மாவட்டம். பல்வேறு கல்லூரிகள் இருந்தாலும் அங்கே நீண்டகாலக் கோரிக்கையான மீன் வளக் கல்லூரி இல்லை. ஆகவேதான், இந்தக் கேள்வியை இங்கே நான் வைத்தேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 42 மீனவ கிராமங்கள் மற்றும் 77 கிலோ மீட்டர்*

[2015 மார்ச் 31

கடலோர மீன் பிடிக்கும் பகுதிகளிலிருந்து சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும், வெகு தொலைவு சென்று மீன் வளக் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சுமார் 1,500 டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. பல அரிய வகை மீன்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சுமார் 2,500 விசைப் படகுகளும், 3,000 கட்டுமரங்களும், நாட்டுப் படகுகளும் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மாவட்டத்தினுடைய மிக முக்கியமான வாழ்வாதாரமே மீன்பிடித் தொழிலாகும். இதை நம்பித்தான் அநேக மக்கள் இருக்கின்றார்கள். ஆகவே, அங்கே ஒரு மீன் வளக் கல்லூரி மிகவும் அவசியம். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் ஒரு மீன் வளக் கல்லூரியை ஆரம்பித்தால், மீன் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கும், வித்தியாசமான முறையில் மீன்களை வளர்ப்பதற்கும், மீன் பெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும். மேலும் நம் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் அதிகமான வருமானத்தை ஈட்டக்கூடியதாக அது அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொண்டு, வருங்காலத்தில், நம்முடைய தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக குளச்சலில் ஒரு மீன் வளக் கல்லூரியை அமைக்க முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் கூறியதை மறுபரிசீலனை செய்ய வேண்டும், அதை நிராகரிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குளச்சலுக்கு அருகில் உள்ள ரீட்டாபுரம் பேரூராட்சியிலே 10 ஏக்கர் நிலம், குளம் உள்ள இடம், தண்ணீர் அதிகமாக உள்ள இடம் இருக்கின்றது. வகை வகையான மீன்களை வளர்ப்பதற்கும், மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கும் தண்ணீர் வசதி உள்ள தடாகங்கள் அங்கே உள்ளன. ஆகவே, நான் அன்பாக வேண்டிக்கொள்வது என்னவென்றால், நிச்சயமாக அங்கே ஒரு மீன் வளக் கல்லூரி தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, என்னுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2015 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகில்தான் தூத்துக்குடி மாவட்டம் அமைந்துள்ளது. மறைந்தும் மறையாத, மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கின்ற புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தூத்துக்குடியிலே ஒரு மீன் வளக் கல்லூரி 1977 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 37 ஆண்டுகளாக சிறப்புடன் இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு, 13 கடற்கரை மாவட்டங்களைக் கொண்டிருந்தபோதிலும், கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். இன்றைக்கு மீன் வளத் துறையின் சார்பாக, 11 மீன் இறங்குதளம், மீன்பிடித் துறைமுகம் போன்றவற்றை அமைப்பதற்காக, தமிழ்நாட்டிற்கு மொத்தத்தில் வழங்கப்பட்ட நிதியில் கிட்டத்தட்ட 65 சதவிகிதத்தை, அதாவது, 374 கோடியே 65 இலட்சம் ரூபாயை வழங்கியவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்தின் தேவையை அறிந்ததால்தான், இன்றைக்கு தமிழ்நாட்டில் 6 இடங்களிலே மீன் வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் இருக்கிறது என்றால், அதிலே 2 கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, பறக்கை மற்றும் ராஜாக்கமங்கலம் ஆகிய பகுதிகளில் மீன் வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் இருக்கின்றது. ஆக, மக்களுடைய தேவையை அறிந்து நிறைவேற்றுகிற ஒப்பற்ற முதல்வர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் மீன் வளப் பல்கலைக்கழகம் மற்றும் மீன் வள தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றை நிறுவ மக்களின்

முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் மற்றுமொரு மீன் வள தொழில்நுட்ப நிலையம் அமைப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அது நடைபெற்று வருகிறது.

மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமானது, டாக்டர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் 1977 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்று மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்தச் சூழ்நிலையில், மீன் வளக் கல்லூரியை தற்சமயம் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நம்பிக்கையோடு இருந்தேன். நீங்கள் இதை ஆரம்பிப்பீர்கள், தருவீர்கள் என்று நினைத்தேன். இருந்தாலும், நான் உங்களை வலியுறுத்தி, இந்த ஆண்டு ஒரு ஆராய்ச்சி மையத்தையாவது குளச்சலிலே ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்வீர்களா என தங்களிடம் அன்பாக வேண்டுகிறேன். அது ஒரு தகுந்த இடம் என்பதால், மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறது.* Kanyakumari district is being rejected in all the projects. *நான் தவறாகச் சொல்லவில்லை, பொய் சொல்லவில்லை. அதேநேரம், மற்ற மாவட்டங்களினுடைய வளர்ச்சியைப் பாருங்கள். அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகின்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான* project-*ம் இல்லை என்பதால், இதை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 மார்ச் 31]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவலை தொடர்ந்து சொல்லிக்கொண்டே வருகிறார். கடந்த 2014-2015 ஆம் நிதியாண்டில் ஏற்படுத்தப்பட்ட ரூ.496 கோடி அளவிலான மொத்தத் திட்டங்களில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் 374 கோடியே 65 இலட்சம் ரூபாய் வழங்கியவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 40 ஏக்கர் நிலமும், ரூ.45 கோடி நிதியும் தேவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்த ஆண்டு ராஜாக்கமங்கலத்தில் மீன் வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் தொடங்கவிருக்கிறது. அதற்கு 7 ஏக்கர் நிலமும், நிதியும் ஒதுக்கப்பட்டு, டெண்டர் பெறப்பட்டு, விரைவிலே அதற்குண்டான பணிகள் நடைபெறவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களில் 21 மீன் வளக் கல்லூரிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், மீனவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக மீன் வளப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியாவிலேயே தமிழகத்தில்தான் மீன் வளப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் வளக் கல்லூரிக்கு இணையான 2 மீன் வள தொழில்நுட்ப நிலையம் (Fisheries Institute of Technology) பொன்னேரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே தூத்துக்குடியில் செயல்பட்டுவரும் மீன் வளக் கல்லூரி மற்றும் 2 ஆராய்ச்சி நிலையங்களையும் சேர்த்து 3 மீன் வளக் கல்லூரிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பறக்கையில் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. இவற்றின்மூலம் மாவட்ட மீனவர்களுக்கு மீன் வளர்ப்பான் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும், மீன் வள தொழில் தொடங்குவதற்கான தேவையினை ஆராய்ந்து, ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு ராஜாக்கமங்கலம் அருகில் உள்ள கணபதிபுரத்தில் நோய் தாக்காத 'தாய் இறால் வங்கி' அதாவது, Shrimp Brood Bank ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் அமைக்க, 7 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் துவங்கவிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மாமன்ற உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, குளச்சலில் மீன் வளக் கல்லூரி அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***30133—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?